**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**OS. 114/2023**
நாள் 03.06.2025

**வா.சா.1. 1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் 3 புல எண்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய முப்பாட்டனார் பெயர் கோபால் கோனார். என்னுடைய பாட்டனார் வீரப்ப கோனார். அவரின் சகோதரர் நடேச கோனார் என்றால் சரிதான். வீரப்ப கோனார், நடேச கோனார் ஆகியோர்களுக்கு சகோதரி உண்டா என்றால் இல்லை. தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்கள் எங்கள் குடும்பத்தில் இருந்ததா என்றால் இல்லை. வீரப்ப கோனார், நடேச கோனார் ஆகியோர்கள் சொத்துக்களை ஏதேனும் கிரயம் வாங்கினார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சொத்துக்கள் எப்படி வீரப்ப கோனார், நடேச கோனார்களுக்கு வந்தது என்றால் தெரியாது. பாகம் பிரித்ததன் அடிப்படையில் கிடைத்தது. பாகப்பிரிவினை பத்திரம் என்பது 26.06.1976 என்றால் சரிதான். அந்த பத்திரத்தை தான் எனது வழக்கில் முதல் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணத்தை முழுமையாக படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். அந்த பாக பத்திரத்தில் குடும்ப பூர்வீக சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குடும்ப பூர்வீக சொத்தை தான் வீரப்ப கோனாரும், நடேச கோனாரும் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாக பிரிவினையின்படி வீரப்ப கோனாருக்கு **அ** அட்டவணை சொத்தும், நடேச கோனாருக்கு **ஆ** அட்டவணை சொத்தும் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த **அ** அட்டவணை சொத்து தான் தாவாவில் கண்ட அடி நிலம் என்றால் சரிதான். மேற்படி பாக பிரிவினை பத்திரத்தில் தாவா சொத்துக்கள் புஞ்சை நிலம் என்றுதான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாக பிரிவினை பத்திரத்தில் உள்ள **அ** அட்டவணை சொத்தில் கட்டிடங்களோ, வீடுகளோ இருந்ததா என்றால் இல்லை. வீரப்ப கோனார் எப்பொழுது இறந்தார் என்றால் தேதி, மாதம் தெரியாது 1982–ல். வீரப்ப

கோனாருக்கு எனது தாயார் பட்டம்மாள், 1–ம் பிரதிவாதி கோவிந்தராசு, சாவித்திரி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். எனது தாயார் எப்பொழுது இறந்தார் என்றால் ஞாபகமில்லை. 1–ம் பிரதிவாதி ஆசிரியராக பணியாற்றி வந்தார் என்றால் சரிதான். எனது தாயாரும், எனது சின்னம்மாள் சாவித்திரி ஆகியோர்கள் வீட்டு குடித்தனம் என்றால் சரிதான். எனது தாயாருக்கு எந்த ஆண்டில் திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது. எனது தாயாருக்கு முதலில் யார் பிறந்தார் என்றால் ஒரு ஆண்மகன் பிறந்து பிறகு இறந்துவிட்டார். எனது பிறந்த தேதி 03.03.1951. எனது தாயாருக்கு 1950–ம் ஆண்டிற்கு முன்பாகவே திருமணம் நடைபெற்றுள்ளது என்றால் சரிதான். எனது தாயார் அவரது தந்தையிடம் சொத்துக்கள் வேண்டுமென சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்றால் சரிதான். எனது பாட்டனார் இறந்த பிறகும், எனது தாயார் இறக்கும் வரை சொத்துக்கள் வேண்டுமென சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். எனது தாயார் 2003–ல் இறந்துள்ள நிலையில் 12.02.2023–ல் நான் வழக்கறிஞர் மூலமாக பாகம் கேட்டு 1–ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய அறிவிப்பிற்கு 06.03.2023–ல் 1–ம் பிரதிவாதி பதில் அறிவிப்பு எனக்கு அனுப்பினார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு 1–ம் பிரதிவாதி பெயரில் தான் பட்டா உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வீரப்ப கோனார் பெயரில் தான் உள்ளது. வீரப்ப கோனார் பெயரில் பட்டா உள்ளதற்கு அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 –ல் தாவா சொத்திற்கு கோவிந்தராசு பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். 1984–ல் UDR பட்டாவிலும் கோவிந்தராசு பெயரில் உள்ளது என்று சொன்னால் அதுபற்றி தெரியாது. வா.சா.ஆ–3 ஐ பொறுத்து நான் எந்த விதமான சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கள் வா.சா.ஆ–3–ன் படி கோவிந்தராசுக்கு சொந்தமான சொத்துக்கள் என தெரிந்திருப்பதால் தான் நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால்

சரியல்ல. வழக்குரை சொத்து வழக்கில் கண்ட 3 சர்வே எண்களில் எந்தெந்த சொத்துக்களில் கடைகள், RCC வீடுகள் உள்ளது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி கடைகள் மற்றும் RCC வீடுகளுக்கு உண்டான கதவு எண்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். மின் இணைப்பு எண்களும் சொல்லவில்லை என்றால் சரிதான். கடைக்கட்டிடம் என்று சொல்லப்படும் இடத்தில் தரை தளத்தில் 2 கடைகளும், முதல் தளத்தில் 3 கடைகளும் உள்ளது. வீடு, கடைகளை 1–ம் பிரதிவாதி கோவிந்தராஜ் என்பவர் வாடகைக்கு விட்டுள்ளார். கடைகள் உள்ள இடத்திற்கும், வீட்டிற்கும் சுமார் 25 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். கடை மற்றும் வீடுகள் கட்டுவதற்கு நகராட்சியில் அனுமதி வாங்க வேண்டும் என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி கோவிந்தராஜ் என்பவர் நகராட்சியில் அனுமதி பெற்றுதான் கடைகள் மற்றும் வீடுகள் கட்டியுள்ளார் என்றால் சரிதான். கடைகள் மற்றும் வீட்டிற்கு 1–ம் பிரதிவாதி பெயரில் தான் சொத்து வரிகள் உள்ளது என்றால் சரிதான். கடைகள் மற்றும் வீடுகளை 1–ம் பிரதிவாதி கோவிந்தராஜ் என்பவர் 1997, 98–ல் கட்டினார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. கடைகள் மற்றும் வீடுகள் கட்டுவதற்கு எவ்வளவு செலவாகியுள்ளது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எனது அறிவிப்பிலும், வழக்குரையிலும் கடைகள் மற்றும் வீடுகள் கட்டுவதற்கும் 1–ம் பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததாக எந்த வாசகமும் இல்லை என்று சொன்னால் சரிதான். 1–ம் பிரதிவாதி பணி ஓய்வு பெற்ற பின்னர் அவருக்கு கிடைத்த பண பலன் பெற்று கடைகள் மற்றும் வீட்டை கட்டினார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் தெரியாது. கடைகள் மற்றும் வீட்டை 1–ம் பிரதிவாதி கோவிந்தராஜ் என்பவர் கட்டியுள்ளதால் அது அவருக்கு சொந்தமான சொத்து என்று சொன்னால் சரியல்ல. 1–ம் பிரதிவாதி கட்டிடங்கள் கட்டும்போது நான் ஆட்சேபனை செய்தேனா என்றால் செய்தேன். எனது ஆட்சேபனையை மீறி 1–ம் பிரதிவாதி கட்டிடங்கள் கட்டிவிட்டார். நான் கொடுத்த அறிவிப்பிலும், வழக்குரையிலும் 1–ம் பிரதிவாதி கட்டிடம் கட்டும் பொழுது நான் ஆட்சேபனை தெரிவித்தும் கட்டிடங்கள்

கட்டிவிட்டார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். 1–ம் பிரதிவாதி பொது சொத்தில் கட்டிடங்கள் கட்ட கூடாது என சட்டப்படியான நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் இல்லை. 1–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்தில் தான் கடைகள் மற்றும் வீட்டை கட்டியுள்ளதால் நான் சட்டப்படியான நடவடிக்கை ஏதேனும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1–ம் பிரதிவாதி, எனது தாயார், எனது சகோதரி ஆகியோர்கள் திருமணத்திற்கு பிறகு தனிக்குடித்தனம் தான் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். வீரப்ப கோனார் 1–ம் பிரதிவாதியின் வீட்டில் தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். வீரப்ப கோனார் இறந்த பிறகு வழக்கு சொத்தை 1–ம் பிரதிவாதி தான் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். பாக பத்திரத்தில் புஞ்சை வகைப்பாடு என காட்டப்பட்டிருந்தாலும் சாகுபடி ஏதும் இல்லை, வருமானமும் இல்லை. 1–ம் பிரதிவாதிக்கு பிறப்பு உரிமையின் அடிமனையில் பாதி பாகம் உண்டு என்றால் சரியல்ல. வீரப்ப கோனார் 1982–ல் இறந்த பிறகு 12 ஆண்டுகளுக்குள் பாக பிரிவினை கேட்காததால் வீரப்ப கோனார் பாகத்தை பொறுத்தும் பாகப்பிரிவினை கோரிக்கை என்பது காலவதியால் பாதிப்படைந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. 1982–ம் ஆண்டு முதல் 1–ம் பிரதிவாதி வீரப்ப கோனாரின் பாக சொத்தை ஏகதேசமாகவும், வெளிப்படையாகவும் அனுபவம் செய்து வருவதால் வீரப்ப கோனாரின் இதர வாரிசுகள் உடைமை நீக்கம் செய்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எனக்கு கூட்டுரிமை, அனுபவம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு கூட்டுரிமை உள்ளது சொல்லி நீதிமன்றத்தில் செலுத்தியுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் வழக்குமூலம் இல்லை என்றும், எனக்கு எந்த பரிகாரமும் தாவா படி கிடைக்கக்கூடியது அல்ல என்றும், அசல் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:– இல்லை.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.